சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், ஆலோசனைக் கூட்டம், நேற்று (04.06.2023, ஞாயிற்றுக்கிழமை) சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் உள்ள ஜி.பி. மஹாலில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

எளிய மக்கள் பயணிக்கும்

ரயில் பாதுகாப்பில் அலட்சியம்!

“தினகரன்” நாளிதழ் தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஜூன் 5-

“எளிய மக்கள் பயணிக்கும் ரெயில் பாதுகாப்பில் அரசு அலட்சியம் காட்டி வருகிறது” என்று “தினகரன்” நாளிதழ் ஏடு தலையங்கம் தீட்டியுள்ளது.

இது குறித்து “தினகரன்” நாளிதழின் தலையங்கம் வருமாறு:-

பெங்களூரு ஹவுரா, கோரமண்டல் எக்ஸ்பிரஸ், சரக்கு ரயில் என்று மூன்று ரயில்கள் ஒடிசாவில் ஒன்றுக்கொன்று மோதிய, ஓரிரு மணித்துளிகளில் 294 உயிர்களை தேசம் இழந்தது இந்திய ரயில்வே வரலாற்றின் கருப்புநாள் ஜூன்2ம் தேதி என்று இதயங்கள் துடித்துக்கொண்டிருக்கிறது. மீளாத்துயரில் கண்கள் கசிந்து கொண்டிருக்கிறது. ஆசியாவின் இரண்டாவது மிகப்பெரிய கட்டமைப்பை பெற்றிருக்கும் இந்திய ரயில்வே, நம்நாட்டு போக்குவரத்தில் முதுகெலும்பாக திகழ்கிறது. ஆனால் ஆண்டு தோறும் அரங்கேறும் விபத்துகளும், அதனால் தொடரும் உயிரிழப்புகளும் மக்கள் மன்றத்தில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருகிறது.

2009ம் ஆண்டு இதே கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் ஒடிசாவில் விபத்துக்குள்ளானதில் 16 பேர் பலியானார்கள். 2011ம் ஆண்டு உத்தரபிரதேசத்தில் சாப்ராம துரா எக்ஸ்பிரஸ் ரயில் பஸ் மீது மோதியதில் 69 பேர், 2012ல் டெல்லிசென்னை தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரயில் நெல்லூர் அருகே தீப்பிடித்ததில் 30பேர், 2014ம் ஆண்டு உத்தரபிரதேசத்தில் கோரக்ராம் எக்ஸ்பிரஸ், சரக்கு ரயிலில் மோதியதில் 25 பேர், 2015ம் ஆண்டு டேராடூனில் இருந்து வாரணாசிக்கு சென்ற ஜனதா எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டதில் 30 பேர், 2016ம் ஆண்டு இந்தூர்பாட்னா எக்ஸ்பிரஸ் ரயில் கான்பூரில் தடம் புரண்டதில் 150 பேர், 2017ம் ஆண்டு ஹரித்துவார் மற்றும் பூரி இடையே ஓடும் கலிங்கா உட்கல் எக்ஸ்பிரஸ் விபத்துக்குள்ளானதில் 21 பேர், 2022ம் ஆண்டு மேற்கு வங்கத்தின் அலிபுர்துவாரில் பிகானோர்குவஹாத்தி எக்ஸ்பிரஸ் தடம் புரண்டதில் 9பேர் என்று நாம் பலிகொடுத்த உயிர்கள் ஏராளம். இவை அனைத்திற்கும் உச்சமாக 294 உயிர்களை இப்போது இழந்திருக்கிறோம்.

தினகரன்
அலட்சியம் தந்த பேராபத்து

இதுபோன்று தொடரும் அபாயங்களை தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்காத இத்துறையின் அலட்சியமும் மிகமுக்கிய காரணம். தொழில்நுட்ப வளர்ச்சிகள் வியப்பூட்டிக்கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் அதுசார்ந்த துறையை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் போதிய அளவில் இல்லை என்பதும், அல்லது அவை துரிதகதியில் நடக்கவில்லை என்பதையும் இங்கே திரையிட்டு மூடமுடியாது. இது ஒருபுறமிருக்க ராஜ்தானி, சதாப்தி உள்ளிட்ட ரயில்கள் விஐபி பிரிவின் கீழ் வருகின்றன. ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரயிலும், சாதாரண எக்ஸ்பிரஸ் ரயில்களும் ஒரே தண்டவாளத்தில் ஒரே சிக்னல் சிஸ்டத்தை பயன்படுத்தியே இயக்கப்படுகிறது.

ராஜ்தானி, சதாப்தி ரயில்கள் விஐபி பிரிவில் இருப்பதால் அந்த ரயில்கள் செல்வதற்கு முன்பு, தண்டவாளங்களை பணியாளர்கள் முழுமையாக ஆய்வு செய்கின்றனர். மேலும் அந்த ரயில்களில் எல்எச்பி என்ற நவீன பாதுகாப்பு கட்டமைப்புகள் கொண்ட ரயில் பெட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ரயில் பெட்டிகளின் கட்டுமானம் மிகவும் வலுவானது. இவை தடம் புரண்டாலும், தாக்கத்தை உள்வாங்கிக் கொண்டு பயணிகளை காக்கும் தன்மை கொண்டது.

எனவே எளிய மக்கள் பயணிக்கும் சாதாரண எக்ஸ்பிரஸ் ரயில்களிலும் இந்த கவனம் இருந்திருக்க வேண்டும். அனைத்து ரயில்களுக்கும் எல்எச்பி பாதுகாப்பு என்பது ஆண்டுக்கணக்கில் அறிவிப்பாக மட்டுமே உலா வருகிறது. இதற்கிடையில் ரயில் விபத்தை தடுப்பதற்கான ‘கவச்’ தொழில்நுட்பத்தின் நிலையும் கேள்விக்குறியாக மாறியுள்ளது.

இங்கே விஐபி என்ற சொல்லை விட உயிர் என்ற சொல் வலிமை வாய்ந்தது. அதற்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் இனிமேலாவது ரயில்களின் இயக்கம் இருக்க வேண்டும் என்பது ஒட்டுமொத்த இதயங்களின் வேண்டுகோள்.

இவ்வாறு தினகரன் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (4.6.2023) சென்னை, டாக்டர் எம்.ஜி.ஆர் மத்திய இரயில் நிலையத்தில், சிறப்பு இரயில் மூலம் சென்னைக்கு வந்த ஒடிசா இரயில் விபத்தில் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு தேவையான மருத்துவ முதல் உதவி அளித்து, தேவைப்படுகிறவர்களுக்கு ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்தனர். உடன் வருவாய் நிர்வாக ஆணையர், கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் - எஸ்.எஸ்.சிவசங்கர் உள்ளிட்ட மீட்புக் குழுவினர் நடவடிக்கை!

சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் 30 பேர் கொண்ட மருத்துவக் குழு:

ஒடிசாவிலிருந்து சிறப்பு இரயில் மூலம் 137 பயணிகள் சென்னை வருகை!

அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் - மா.சுப்பிரமணியன் வரவேற்றனர்!

சென்னை, ஜூன் 5-

ஒடிசா மாநிலம், பாலசோரில் ஏற்பட்ட பெரும் இரயில் விபத்தில் காயமடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளுக்குத் தேவையான மருத்துவம் மற்றும் இதர உதவிகளைச் செய்திடவும், உயிரிழந்தவர்களைக் கண்டறிந்து அவர்கள் குடும்பத்தினருக்கு உதவிடவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், மீட்புக் குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, ஆகியோர் விபத்து நடந்த பாலசோர் என்ற இடத்தில் நடந்து வரும் மீட்புப் பணிகளைக் கவனித்து வருகின்றனர். மற்றொரு குழுவான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், ஆசிரியர் தேர்வாணையக் குழுவின் தலைவர் திருமதி அர்ச்சனா பட்நாயக், ஆகியோர் ஒடிசாவில் இதற்கென பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையில், இரயில் விபத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் விபரங்களை சேகரித்தும், மீட்புப் பணிகளுக்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தியும் வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று அதிகாலை 4.30 மணியளவில் ஒடிசாவிலிருந்து சிறப்பு இரயில் மூலம் 137 பயணிகள் சென்னை வருகை தந்தனர். இவர்களை இரயில் நிலையத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வருவாய் நிர்வாக ஆணையர், கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஆகியோர் வரவேற்றனர். நேற்று காலை வருகை தந்த பயணிகளுக்கு காலை சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.

இவர்களில் 36 பயணிகளுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. 34 பயணிகள் இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அனுப்பி வைக்கப்பட்ட இவர்களில் 3 பயணிகள் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்ற பயணிகள் சிறு சிகிச்சைக்குப் பிறகு அவர்களது இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில், ஒடிசா மாநிலத்திலிருந்து சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு வந்தடைகின்ற பயணிகளுக்கு தேவையான பரிசோதனை மற்றும் மேல் சிகிச்சை மேற்கொள்ள 30 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இவர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிக்கென அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் 7 பேருந்துகளும், காவல் துறை மூலம் 50 டாக்ஸிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது. கூடுதலாக 10 அவசர கால ஊர்தியும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இரயில் நிலையத்தில் வீல் சேர், ஸ்டிரெச்சர் வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வருவாய்த் துறை, சுகாதாரத் துறை அலுவலர்கள், வருகின்ற பயணிகளுக்குத் தேவையான உதவிகள் செய்திட பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

முகமது ஹுசைன் மாலிம் தலைமை! பால்ராஜ் முன்னிலை!

பஹ்ரைனில் - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. சிறப்புரை!

பஹ்ரைன், ஜூன் 5-

வளைகுடா நாடுகளில் ஒன்றான பஹ்ரைன் நாட்டின் தலைநகர் மனாமா உள்ள கே.எம்.சி.சி அரங்கில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, உலகில் முதல் நூற்றாண்டு விழா கடந்த ஜூன் 2 ஆம் தேதி வெள்ளிக்கிழமை, வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் தலைவர் முகமது ஹுசைன் மாலிம் தலைமையில் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியின் தலைமை விருந்தினராக தி.மு.க வின் அயலக அணிச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான எம்.எம். அப்துல்லா எம்.பி. விழா பேருரை நிகழ்த்தினார். சிறப்பு அழைப்பாளராக அமீரக தி.மு.க பொறுப்பாளர் மற்றும் தமிழ்நாடு அரசின் புலம் பெயர்ந்த தமிழர்களின் நல வாரியத்தின் உறுப்பினர் எஸ்.எஸ். மீரான் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

75 ஆண்டு கால வரலாறு கொண்ட இந்தியன் பள்ளியில் தமிழ் இரண்டாவது பாடமாக கடந்த 2017 ஆண்டு முதல் தான் இருந்து வருகிறது.

கடந்தாண்டு தமிழ் பாடத்தில் 95க்கும் கூடுதலாக அதிகம் மதிப்பெண் பெற்ற பதினாறு மாணவ, மாணவியர்களுக்கு வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் சார்பில் சான்றிதழ் வழங்கப்பட்டது. தமிழ் ஆசிரியை. ராஜேஸ்வரி மணிகண்டனுக்கும் எம்.எம் அப்துல்லா பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கினார்.

தலைமை உரையாற்றிய முகமது ஹுசைன் மாலிம், தலைவர் கலைஞர் அவர்களின் தலைமை பண்புகள் பற்றியும், சமூகநீதி மற்றும் சமத்துவம் தன்னுடைய இரு கண்களாக மதித்தவர் தலைவர் கலைஞர் என்றும். மிசா காலக்கட்டத்தில் கழகம் கண்ட சோதனைகளையும் அதை கலைஞர் அவர்கள் கையாண்ட முறைகள் பற்றியும் எடுத்துக்கூறினார்.

சிறப்புரை ஆற்றிய எஸ்.எஸ். மீரான் அவர்கள் கடல் கடந்து வாழும் தமிழர்களின் நலன் காக்கும் பொருட்டு கழக ஆட்சியில் அமையப்பெற்ற வெளிநாடு வாழ் தமிழர்கள் நல வாரியம் மேற்கொள்ளும் பணிகள் பற்றியும், வெளிநாடுகளில் வேலை செய்யும் போது இறந்து விட்டால் அவர்களது குடுபத்திற்கு இழப்பீடு மற்றும் ஆயுள் காப்பீடு திட்டங்கள் பற்றியும் எடுத்துகூறினார்.

விழா பேருரை நிகழ்த்திய தலைமை விருந்தினர் எம்.எம் அப்துல்லா எம்.பி. பேசுகையில். தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் வளர்ச்சியாக, தமிழர்களின் வளர்ச்சிக்கு என்னென்ன திட்டங்களை மிக நுட்பமான முறையில் மேற்கொண்டார் என்று பட்டியலிட்டார். துணை நகரங்களை அமைத்து சென்னையை மாநகரை எப்படி பெருநகர மாக மாற்றி வடிவமைத்தார் என்பது முதல். கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு என்னென்ன அடிப்படைத் தேவைகள் என்பதை கணக்கிட்டு திட்டங்கள் வகுத்தவர் தலைவர் கலைஞர் என்றும். அரசின் திட்டங்களின் மூலம் மக்களுக்கு கொடுப்பது இலவசம் அல்ல அது மக்கள் மீது செய்யும் அரசின் முதலீடு என்பது பற்றிய மிக விளக்கமாக பேசினார்.

மொழி வளர்ச்சிக்காக தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய அரும்பெரும் சேவைகளை உணர்ச்சி பொங்க பேசிய எம்.எம். அப்துல்லா,கடல் கடந்தும் கழகம் வளர்க்கும் உடன்பிறப்புகளும் நன்றிகளை கூறிய. பஹ்ரைனில் வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் சிறப்பாக செயல்படுகின்றது என்றும் பராட்டிப் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், ஒருங்கிணைந்த தமிழ் கூட்டமைப்பின் முதன்மை ஒருங்கிணைப்பாளர் கவிஞர் அப்துல் கையூம் தலைவர் கலைஞர் அவர்களைப் பற்றிய வாழ்த்துக் கவிதை பாடினார். ம.தி.மு.க சார்பில் வல்லம் பசீர் உரையாற்றினார்.

முஸ்லீம் லீக் சார்பில் சுலைமான், அமீரக தி.மு.க சார்பில் பிலால் அலியார், பாரதி தமிழ் சங்கத்தின் சார்பில் ஜி.பி சாமி, லட்சுமி நாராயணன், த.மு.மு.க சார்பில் யூசுப் ராஜகிரி, சவூதி வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் சார்பில் முகமவை சீனி முகமது, எஸ்.கே எஸ் சிக்கந்தர் பாபு, சவூதி தமிழ் கலாச்சாரப் பேரவை சார்பில் ரஹ்மத்துல் லாஹ் ஆகியோர் பேசினர். திருமேனி வரவேற்பு நிகழ்த்த, துணைப் பொறுப்பாளர் சுல்தான் இப்ராஹீம் தொகுத்து வழங்கினார்.

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லிஅறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பூவிருந்தவல்லி வழக்கறிஞர்கள் சார்பில் மாபெரும் கிரிக்கெட் திருவிழா நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளரும் முன்னாள் பால்வளத்துறை அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கிரிக்கெட் போட்டியை துவக்கி வைத்து போட்டியாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார் உடன் பூவிருந்தவல்லி நகரச் செயலாளர் ஜி.ஆர். திருமலை, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ்,நகர் மன்ற துணைத் தலைவர் க.ஸ்ரீதர், பொதுகுழு உறுப்பினர் பொன்.விமல், வழக்கறிஞர் சங்கம் தலைவர் ஏ.ஏகாம்பரம், செயலாளர் டி.கோபு, பொருளாளர் ஜெ.ஆனந்த் பாபு, நகர நிர்வாகிகள் எச்.தாஜுதீன், பாஸ்கர், மலர்மன்னன், ஜெ.சுதாகர், ப.அன்பழகன், பி.சௌந்தரராஜன், எம்.கே. சுகுமார், இ.பழனி, எச்.அருண் செரிப், இ.ஆர்.எஸ்.பழனி, ஜெ.அமிதாப், ஆனந்த், தங்கம் திருமலை, சரவணன், நந்தகுமார், யுவராஜ் பாபு, எம்.உமா சங்கர், இன்பசகரன், ஏ.எஸ்.ஆர்.சுரேஷ், ராஜகுரு, அழகிரி, நித்தியானந்தன், நிஜாமுதீன், உள்பட வழக்கறிஞர் சங்க நிர்வாகிகள் உள்ளனர்

ஒடிசா ரயில் விபத்து : ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில்

விசாரணைக்கு உத்தரவிடவேண்டும்!

உச்சநீதிமன்றத்தில் பொது நல வழக்கு!

புதுடெல்லி, ஜூன் 5 -

ஒடிசா ரயில் விபத்து குறித்து, ஓய்வுபெற்ற உச்சநீதிமன்றநீதிபதிதலைமையில் விசாரணைக்குஉத்தரவிடக் கோரி, உச்சநீதி மன்றத்தில் பொது நலவழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாட்டையே உலுக்கிய ஒடிசா ரயில் விபத்தில் 294க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்த விபத்துக்கு தொழில்நுட்ப கோளாறே காரணம் என, ஒன்றியரயில்வேஅமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஒடிசா ரயில் விபத்து தொடர்பாக, ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணைக்குஉத்தரவிடக்கோரி உச்சநீதிமன்றத்தில் பொது நல வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. உச்சநீதிமன்ற வழக்கறிஞர்விஷால்இவாரி என்பவர் தாக்கல் செய்த மனுவில்,ரயில்பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய தானியங்கிநவீனசிக்னல்கருவிகளை நிறுவ ஒன்றிய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

2 மாதத்தில் விசாரணை அறிக்கை தாக்கல் செய்யும் வகையில் உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் எதிர்காலத்தில் இது போன்ற விபத்துகள் ஏற்படாமல் இருக்கவும் உரிய பரிந்துரைகளைவகுத்துஒன்றிய அரசுக்கு உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும்என்றும்மனுவில்கோரப்பட்டுள்ளது. இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் விரைவில் விசாரணைக்கு வருகிறது.

அரக்கோணம் நகரத்தில் வி.எல்.ஜோதி தலைமையில்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

திருவுருவப் படத்திற்கு கழகத்தினர் மலரஞ்சலி!

அரக்கோணம்,ஜூன் 5-

முதல்வர் ஆணைக்கிணங்க ராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி வழிகாட்டிலின் படி நவீன தமிழகத்தை செதுக்கிய சிற்பி முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின். 100வது பிறந்த நாளை முன்னிட்டு அரக்கோணம் நகர செயலாளர் வி.எல்.ஜோதி சுவால் பேட்டை பிள்ளையார் கோயில் அருகில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மற்றும் ஒடிசா ரயில் விபத்தில் உயிர் இழந்தவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது

இதில் மு.கன்னையன் என்.ராஜ்குமார், லட்சுமி பாரி, துரைசீனிவாசன் எம்.சி., கோ.வ.தமிழ்வாணன், நந்தா தேவி எம்.சி., எஸ்.ரமேஷ்பாபு, ஆர்.லிங்கம் எ.தமின்அன்சாரி, வி.பால கிருஷ்ணன், எம்.கே.சிவா, டி.அந்தோணி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் ! நேதாஜி யு.கணேசன் தலைமை !

38 வது வட்டத்தில் 1000 நபர்களுக்கு காலை சிற்றுண்டி !

தா.இளையஅருணா, ஜே.ஜே.எபினேசர், ஜெபதாஸ்பாண்டியன் பங்கேற்பு !

சென்னை ஜூன்:5

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்ட கழகத்தின் சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வட்ட கழகச் செயலாளர் 4வது மண்டலக் குழுத்தலைவர் நேதாஜி யு.கணேசன் தலைமையில் நேதாஜி நகர் மெயின் தெருவில் (02.06.2023 வெள்ளிக்கிழமை) 1000 நபர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கு விழா நடைபெற்றது.

கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி காலை சிற்றுண்டியை மாவட்ட கழகச் செயலாளர் தா.இளையஅருணா, சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், பகுதிச் செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் ஆகியோர் வழங்கினர். இதில் எஸ்.எல்.சுந்தர், எம்.பாலு,ஏ.டி.மணி, எஸ்.எம்.அப்துல்ரகுமான், பி.சீனிவாசன்,எல். சரவணன்,ஜி.ராஜா, எஸ்.சரவணகுமார், எம்.விமலா, வி.ராஜேஸ்வரி, எஸ்.கிருஷ்ணன், கே.சி.ராஜா,எஸ்.ராஜா, வி.எஸ்.ரவி, ஏ.முருகேசன், எம்.குருவா, ப.தாமோதரன், மெடிக்கல் ஆனந்தன், ஆர்.சுந்தர்ராஜ்,ஏ.வீரா, ப.தேவராஜ், ஏ.சிவகுமார்,பேப்பர் அ.ஆனந்தன், எம்.பி.பாலு, எஸ்.சக்திவேல், எல்.சந்திரசேகர், மோகன்,எம்.சரஸ்வதி, ராஜாக்பாய்,மீஞ்சூர் முகுந்தன், எஸ்.ஜான் கென்னடி., ஜெ.அசாருதீன், எஸ்.சேபனா, கிருஷ்ணவேணி, பாப்பம்மாள், அப்பாஸ்பாய், எம்.ஹரிகிருஷ்ணன், மணிகண்டன், மானாமதுரை,ஜலால், ஆலன்ராஜ், எஸ்.கமருதீன், பி.அருணாச்சலம், மாரியப்பன், சாகுல்அமீது, தமிழ்செல்வன்,முகமது எகியா,நேரு நகர் சண்முகம் மற்றும் மாவட்ட பகுதி 38வது வட்ட கழக தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கர்நாடக மாநில கழகம் சார்பில் பெங்களூரில் உள்ள கழக அலுவலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மாநில அமைப்பாளர் இராமசாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிள் உள்ளனர்.